# கனடா-காரை கலாசார மன்றம்

## தமிழ் மொழித் திறன் போட்டி – 2022

**சொல்வதெழுதுதல் - உயர் பிரிவு (10ஆம்,11ஆம்,12ஆம் தர மாணவர்கள்)**

தரப்பட்டுள்ள பந்திகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில வசனங்கள் சொல்வதெழுதலிற்குத் தரப்படும்.

மக்களுக்கு உணவு இன்றியமையாதது போலக் கல்வியும் இன்றியமையாததே. உணவு உடலை வளர்ப்பது. கல்வி அறிவை வளர்ப்பது. நாகரிகம் மிக்க நாடுகளில் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கத்தினால் பல முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஊருக்கொரு பாடசாலை நிறுவுகிறார்கள். ஆங்காங்கு நூல் நிலையங்களையும் அமைக்கிறார்கள். பாடசாலைப் படிப்பில் குறிப்பிட்ட சில நூல்களே இடம்பெறுகின்றன. அவற்றை மட்டும் கற்று ஒரு மாணவனால் சாதிக்கமுடியாது. நூல் நிலையப் படிப்பினாலேயே பரந்த அறிவை ஏற்படுத்த முடியும்.

நம் முன்னோர்கள் சாந்துணையும் கல்வியை வளர்த்தார்கள். இன்றும் மேனாட்டவர் பலர் கல்வியிலேயே காலத்தைக் கழிக்கின்றனர். மேநாடுகளில் ஊருக்கு ஊர் நகருக்கு நகர் நூல் நிலையங்களை நிறுவி பயனடைகிறார்கள். நடுத்தர வகுப்பினருக்கும் கீழ்த்தர வகுப்பினருக்கும் பொது நூலகங்கள் அவசியமானவையாகும். செல்வந்தர்கள் தம் வீட்டிலேயே நூல் நிலையம் அமைத்துக்கொள்ள முடியும்.

அவப்பொழுதை தவப்பொழுதாக்கிக் கொள்ள எல்லோரது இல்லங்களிலும் சிறிய நூலகங்களாவது அமைதல் சிறந்ததாகும். “அரிசிப் பொரியோடு திருவாரூரும்” என்றவாறு பொழுது போவதோடு அறிவும் பெருகும். பாடசாலைகளிலும், நகரங்களிலும், ஊர்களிலும், ஒவ்வோர் இல்லங்களிலும் நூலகங்கள் விளங்கவேண்டும். இவ்வித விளக்கம் உள்ள நாடுதான் அறிவிலும் பண்பாட்டிலும் மேம்பட்ட நாடு என்று அழைக்கப்படும்.